(This question paper contains 2 printed pages)

Roll No.

Sl. No of Question Paper: 5273

Unique Paper Code: 208361

Name of the Paper: Journalistic Writing and Translation

E

Name of the Course: B. A. (Prog.) Tamil A

Semester: III

Duration: 3 Hours.

Max. Marks: 75

## பகுதி I

1. செய்திக்கதை என்றால் என்ன? பத்திரிகையில் செய்திக்கதை அமையும் விதத்தை விளக்குக. 10

(அல்லது)

'டிசம்பர் 23-ஆம் தேதி நாடாளுமன்றம் கூடுகிறது'– இத் தலைப்பில் ஒரு செய்திக் கதை தயாரிக்க.

2. அறிக்கை எப்படி அமைய வேண்டும்? சான்று தந்து விளக்குக. 10

(அல்லது)

உங்கள் கல்லூரியில் நடந்த தமிழ் மன்ற ஆண்டு விழா குறித்து ஓர் அறிக்கை எழுதுக.

3. சிறப்புக் கட்டுரை (Feature Writing) என்றால் என்ன? சிறப்புக் கட்டுரை எழுதும் விதம் குறித்து விவரிக்க. 10

(அல்லது)

டென்னிஸ் வீராங்கனை சாய்னா நேவால் குறித்து ஒரு சிறப்புக் கட்டுரை எழுதுக.

4. பத்திக் கட்டுரை அமையும் விதத்தைச் சான்றுகளுடன் விவரிக்க. 10

(அல்லது)

பெண் சிசுக்கொலை குறித்து ஒரு பத்திக் கட்டுரை வரைக.

5. தலையங்கம் என்றால் என்ன? அதன் மொழிநடை அமையும் விதம் குறித்து எழுதுக. 10

(அல்லது)

காவிரி நீர்ப் பங்கீடு என்னும் தலைப்பில் ஒரு தலையங்கம் எழுதுக.

## பகுதி II

1. கீழ்வரும் பத்தியைத் தமிழில் மொழிபெயர்க்க: 10

Mahabalipuram has some *Mahabharata* scenes sculpted on stones during Pallava rule. These sculptures are called by the names of the *Mahabharata* characters. In a recent study by Sa. Baluswamy on the Mahabalipuram sculptures the researcher has identified the overwhelming influence of Mahabharata in the execution of the famous Arjunan sculpture panel. The scenes which portray the penance of Arjunan and Bhageeratha and their backdrops are exact replica of Mahabharata description. The presence of Gandharva, Apsaras, Kinanaras, Kimburudas, Siddhas, Saranas, Rishis, Kirathas all resemble the narration in the epic. The scenes of Bhadrikasrama and the four tusked elephant and its flock are exactly as they are described in the epic. Further the scene of the hypocritical cat is also from Mahabharata.

2. கீழ்வரும் பத்தியை ஆங்கிலத்தில் மொழிபெயர்க்க: 10

மனித இனம் தோன்றிய இடம் இலெமூரியாக் கண்டம். அப்பகுதி மனித நாகரிகத் தொட்டில் என்பது மேலை நாட்டவரின் கருத்து. இக் கருதுகோள் மனித நாகரிகத்தை வளர்த்தவர் எவ்வினத்தார் என்ற கேள்விக்கு வழி வகுத்தது. எனவே மேலை நாட்டவர்களைப் பின்பற்றித் தமிழறிஞர்கள் பலரும் குமரிக்கண்டம் பற்றிய ஆய்வை மேற்கொண்டனர். அவர்களது அத்தகைய முயற்சியின் பயனால் முதன்முதலில் நாகரிகத்தை வளர்த்தவர்கள் திராவிடர்களாக இருக்கலாம் என்ற கருத்து வலுப்பெற்றது. அங்கு வாழ்ந்த மக்கள், அவர்களிடம் காணப்பட்ட தாய்வழி உரிமை ஆகியவற்றை எடுத்துக் கூறி இலெமூரியாக் கண்டம் என்பது குமரிக்கண்டம் என்றும் இலெமூரியர்கள் என்பவர் தமிழர்களே என்றும் ஒரு கருத்தை இலக்கிய ஆய்வாளரான கா. அப்பாத்துரை நிறுவியுள்ளார்.

3. கீழ்வரும் வினா–விடைப் பகுதியை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்க: 05

நம்நாட்டுப் பெண்களுக்கும் வெளிநாட்டுப் பெண்களுக்கும் உள்ள கலாச்சாரம் பற்றிய தங்கள் கருத்து என்ன?

நம் நாட்டுப் பெண்களை நமது கலாச்சாரத்துடனும் வெளிநாட்டுப் பெண்களை வெளிநாட்டுக் கலாச்சாரத்துடனும் பார்க்க வேண்டும். வெளிநாட்டுப் பெண்ணை நம்நாட்டுக் கலாச்சாரத்துடனும் நம் நாட்டுப் பெண்ணை வெளிநாட்டுக் கலாச்சாரத்துடனும் இணைத்துப் பார்க்கக் கூடாது என்பது என் எண்ணம்.